

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.3.2025) செங்கல்பட்டு சுற்றுலா மாளிகையில், கழக தகவல் தொழில்நுட்ப பிரிவின் மாநில துணைச் செயலாளர் தமிழ்மாறன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரவிசந்திரன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2025) சென்னையில் நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் மு.பா. அன்புச்சோழன் அவர்களின் மகள் அ. காவியா – ச.பிரவின் ராகுல் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## தமிழ்நாடு அரசின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை!

# தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வருகிறது!

## பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திட்டவட்டம்!

## ஒன்றிய கல்வி அமைச்சருக்கு பதிலடி!

சென்னை, மார்ச் 13 -

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் கூற்றுக்குப் பதிலடி கொடுத்து வலை தளத்தில் பதிவிட்டுள்ள தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி "தேசிய கல்விக் கொள்கையை எதிர்ப்பது என்ற தமிழ்நாடு அரசின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியின் வலைதளப் பதிவு வருமாறு:-

தேசியக் கல்விக் கொள்கையை தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வருகிறது. எங்களது முடிவில் எந்த மாற்றமுமில்லை. தேசிய கல்விக்கொள்கை விவகாரத்தில் தமிழ்நாட்டின் நிலைப்பாடு குறித்து தவறான தகவல்களை ஒன்றிய அரசு பரப்பி வருகிறது. தவறான தகவல்களை பரப்புவதால் உண்மை மாறாது. தமிழ்நாட்டின் கல்வி முன்மாதிரியானது, நமது மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் திறனை தொடர்ந்து நிரூபித்துள்ளது.



- **தவறான தகவல்களைப் பரப்புவதன்மூலம் உண்மைகளை மாற்ற முடியாது. 2024 மார்ச் 15ம் தேதி எழுதிய கடிதத்தில் தேசிய கல்விக் கொள்கையை ஏற்பதாகக் கூறவில்லை; "குழு அமைக்கப்படும்; அதன் பரிந்துரைப்படி திட்டத்தில் சேருவது பற்றி முடிவு" என்றே கூறினோம்.**
- **15.3.2024 தேதியிட்ட கடிதம் NEPக்கான ஒப்புதல் அல்ல; எங்களது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை; குழு அமைக்கப்படும் என்றும், அதன்படி முடிவெடுக்கப்படும் என்றும் தான் கடிதத்தில் தெளிவாகக் கூறியிருந்தோம். தமிழ்நாட்டின் கல்வி மாதிரியை குறை மதிப்பிற்கு உட்படுத்துவதால், தேசிய கல்விக் கொள்கையை எதிர்க்கிறோம்.**
- **"தமிழ்நாட்டின் கல்வி மாதிரி முன்மாதிரியானது. தவறான தகவலை பரப்புவதால் உண்மை மாறிவிடாது.**
- **இந்தியாவின் பன்முகத் தன்மை, நாட்டில் பலமே தவிர பலவீனமல்ல! புதிய கல்விக் கொள்யைத் திணிக்கும் மத்திய அரசுதான் அரசியல் செய்கிறது.**
- **எங்கள் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை**

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.3.2025) "Champions of Future அகாடமியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பைக் பந்தய வீரர் செல்வன். ரெஹான் கான் ரஷீத்க்கு தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் ரூ. 5.00 லட்சத்திற்கான காசோலையை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

